ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2483/68 - 2026 අප්‍රේල් මස 10 වැනි සිකුරාදා - 2026.04.10**

2483/68 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இரண்டாம் நிலை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகம்**

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் (இதன் பின்னர் “சட்டம்” எனக் குறிப்பிடப்படும்) 53ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டும், அமைச்சரவையின் அனுமதியைப் பின்பற்றியும், இக் கட்டளையின் மூலம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்:-

(அ) அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரரின் வணிகத்தை, இரண்டாம் நிலை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகமொன்றாக பெயரிடுவதற்கு, அமைச்சரவையானது 2026, மாச்சு 30ஆம் திகதியிட்ட 26/0621/804/083 ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கியுள்ளது;

(ஆ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகத்தை மேற்கொள்ளும் விண்ணப்பதாரரின் பெயர், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்;

(இ) குறித்த வணிகத்தை இரண்டாம் நிலை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகமொன்றாக கருதுவதற்கான தர்க்க ரீதியான காரணங்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறாகும்; மற்றும்



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஈ) குறித்த சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை III இல் குறிப்பிட்டுள்ளவாறு அமைதல் வேண்டும் என்பதுடன், அவை அவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் ஆரம்பிக்கப்பட்டு குறித்த திகதிகளில் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்

கொழும்பு,
2026, ஏப்பிறல் 10.

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாக நியமிக்கப்பட்ட வணிகத்தின் விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரியின் பெயர் | இம்பேரியல் எட்வைசர் (பிரைவட்) லிமிடெட்<br>(IMPERIAL ADVISORS (PVT) LTD) | |
| 2. | அங்கீகரிக்கப்பட்ட நபரின் அனுமதிப்பத்திர இலக்கம் | 2407220090 | |
| 3. | அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட திகதி | 2024, செத்தெம்பர் 06 | |
| 4. | தகைமை அளவுகோல்கள் | 2025, செத்தெம்பர் 20 ஆம் திகதிய 2454/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கு விலக்களிப்புகள் அல்லது ஊக்கு விப்புகளை வழங்குவது தொடர்பான வழிகாட்டல்கள்) ஒழுங்கு விதிகளின் 5ஆம் ஒழுங்குவிதி | |
| 5. | வணிகத் துறை | வணிகச் செயற்பாட்டு வெளிப்பணிப்பகிர்வு | |
| 6. | எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் (அமெரிக்க டொலர்) | வருடம் 1 | 134,500 |
| | | வருடம் 2 | - |
| | | வருடம் 3 | - |
| | | வருடம் 4 | - |
| | | வருடம் 5 | - |
| 7. | எதிர்பார்க்கப்படும் வேலை வாய்ப்புகள் (எண்ணிக்கை) | வருடம் 1 | 50 |
| | | வருடம் 2 | 75 |
| | | வருடம் 3 | 195 |
| | | வருடம் 4 | 245 |
| | | வருடம் 5 | 300 |
| 8. | வர்த்தக ரீதியான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதி | இக்கட்டளை பிரசுரிக்கப்பட்டு 03 மாதங்களில் | |

**அட்டவணை II**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாகக் கருதுவதற்கான நியாயப்பாடு**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53(5) ஆம் பிரிவின் ஏற்பாடுகளான தேசிய நலன் அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை நிறுவுதலின் வெற்றியை உறுதி செய்வதற்காக, இவ்வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகமொன்றாக பெயரிடும்போது குறித்த சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் நோக்கங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட இம்பேரியல் எட்வைசர் (பிரைவட்) லிமிடெட் (IMPERIAL ADVISORS (PVT) LTD) நிறுவனமானது, கணக்கியல், நிதி ஆலோசனைகள், ஈட்டுதவி மற்றும் பின்-அலுவலகத் தீர்வுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, ஐக்கிய இராச்சியத்திலுள்ள வாடிக்கையாளர்களுக்கு வணிகச் செயல்முறை புறஆதார சேவைகளை வழங்குவதில் விசேடத்துவம் பெற்றுள்ளது. கொழும்புத் துறைமுக நகரத்தின் செயல்நுணுக்க இருப்பிடம் மற்றும் வணிகத்திற்கு சாதகமான சூழலைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அங்கு ஒரு குறிப்பிடத்தக்க இருப்பை ஏற்படுத்த இந்நிறுவனம் இலக்கு கொண்டுள்ளது. இந்நிறுவனம் பலவிதமான பிரத்தியேக புற உதவிச் சேவைகளை வழங்கும். இச்சேவைகளில் கணக்கியல் சேவைகளின் கீழ் நிபுணத்துவ நிதி முகாமைத்துவம் மற்றும் வரி இணக்கப்பாடு, நிதி ஆலோசனைகள் மூலம் வாடிக்கையாளர்களின் நிதி நலனை மேம்படுத்துவதற்கான செயல்நுணுக்க நுண்ணறிவுகள், அடமான ஆலோசனைகள் ஊடாக அடமானத் தயாரிப்புகள், வட்டி விகிதங்கள் மற்றும் கடன் விருப்பங்கள் குறித்த நிபுணத்துவ வழிகாட்டல்கள், மற்றும் சீரான செயல்பாட்டிற்காக நெறிப்படுத்தப்பட்ட நிர்வாகச் செயல்முறைகளைக் கொண்ட பின்-அலுவலக ஆதரவு ஆகியவை உள்ளடங்கும்.

**அட்டவணை III**

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 1 | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ், அனைத்து ஆதாயங்கள் மற்றும் இலாபங்கள் மீதான கூட்டிணைக்கப் பட்ட வருமான வரியானது, 7.5% எனும் சலுகை வரி வீதத்தில் அறவிடப்படும் | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதி | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 4 ஆண்டுகளில் |
| 2 | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப் பட்ட வரிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 3 | 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 4 | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 5 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

அட்டவணை III *(தொடர்ச்சி)*

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 6 | சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட வணிகம்சார் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளுக்கும், இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும் | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதியில் |
| 7 | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம்சார் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி களுக்கும், இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும் | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதியில் |
| 8 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம்சார் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளுக்கும், இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும் | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதியில் |
| 9 | 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 10 | 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர் வேலை நிறுத்தம் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, 11 ஆம் பிரிவு மற்றும் 12 ஆம் பிரிவு ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் உரிமம் காலாவதியாகும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது. |
| 11 | பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 267) | இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிலிருந்து விலக்களிக்கப்படும். | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் உரிமம் காலாவதியாகும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது. |

**அட்டவணை III** (*தொடர்ச்சி*)

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 12 | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டம் | 2022, யூன் 3 ஆம் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அந்நியச் செலாவணி (கொழும்புத் துறைமுக நகரத்திலான முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் நீங்கலாக, இச்சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் உரிமம் காலாவதியாகும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது. |
| 13 | 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்ட தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

EOG 04 - 0256

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.